1971 டிசம்பர் 16]

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, போக்குவரத்து வசதியில்லாத, பேருந்துகள் செல்லாத பகுதியில், பொது மக்களுக்கு வசதிசெய்வதை முன்னிட்டு, அரசாங்கமே அங்கு வாடகை டாக்சிகள் விட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அத்தகைய உத்தேசம் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆகையினால் இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வீரராகவசாமி கோவில் நிதி

*** 491 வின—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து 23—6—1967, 8—5—1968 தேதிகளுள்ள திருப்பூர் வீரராகவ பெருமாள், விஸ்வேஸ்வரசாமி கோயில்களின் பணத்தை பயன் படுத்திக் கொண்டார்கள் என்பது பற்றிய விண்ணப்பங்கள் அமைச்சர் அவர்கட்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவை மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இம்மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேலும் உதவி ஆணையர் செய்துள்ள பரிந்துரைக்கிணங்க இக்கோவிலுக்கு நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு கோயில் நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டிருக்கிற ஏராளமான குறைபாடுகள் இன்னும் களையப் படவில்லை. குறைபாடுகளை போக்கவும், பொதுமக்களுடைய பணம் விரயமாகாமல் இருக்கவும், தவறுகளைக் கண்டுபிடிக்கவும் தனியாக அதிகாரியை நியமிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தகவல் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. வாடகைப் பணத்தை கையாண்டதற்காக நிர்வாகி ஐயர் மீது குற்றம் சாட்டப்பட்டு பதவி விலக்கம் செய்து வேறுதகுதியுள்ள உறுப்பினரை நியமித்து, வாடகையை அதிகப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சட்டப்படி அதிகம் செய்ய நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றாலும், சமாதனமான முறையில் சந்தித்துப்பேசி ரூ. 11,800 என்று இருந்த வாடகையை மாற்றி. ரூ. 18,300 என்று செய்யப் பட்டிருக்கிறது. குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. ஆலயத்தின் உண்டியல்.

வரவு செலவுக்கு ஒப்புதல் அளிப்பது போன்றவற்றில் நடவடிக்கை எடுக்கிறோம். தனி அதிகாரி வேண்டுமென்றால் நடவடிக்கை எடுக்கலாம்.

திருக்கண்மாலீஸ்வரர் ஆலயம்

* 492 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரத்திலுள்ள திருக்கண்மாலீஸ்வரர் தேவஸ்தானத்தின் மூலமாக ஒரு பயணியர் விடுதியும் கல்யாண மண்டபமும் கட்ட அரசு எப்போது உத்தரவிட்டது ?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது ? காலதாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) கிருஷ்ணராயபுரம் திருக்கண்மாலீஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமான எஸ்.எப். நெ. 114/4-ல் ஏக்கர் 0.16 நிலத்தில் ஆலயப் பொறுப்பில் கல்யாண மண்டபமும் பயணியர் விடுதியும் கட்ட, கோயம்புத்தூர் துணை ஆணையர், தனது 31—5—70 தேதிய உத்தரவில் பணித்துள்ளார். கிருஷ்ணராயபுரம் பேரூராட்சி மன்றம் அந்த இடத்தில் கல்யாண மண்டபம் அமைப்பதை பள்ளி நலனையும் பொது நலனையும் முன்னிட்டு, ஆட்சேபித்ததால் கல்யாண மண்டபத்தையும், பயணியர் விடுதியையும் கோவிலுக்கு முன்புறத்தில் கட்ட அறங்காவலர் முடிவெடுத்து திட்டம் நடவடிக்கையில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், ஒவ்வொரு லிஸ்டட் டெம்பிளிலும் ஏழை மக்களுடைய வசதிக்காக, கல்யாண மண்டபம் கட்ட உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போது அப்படிப்பட்ட காரியங்களைத்தான் செய்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, திருச்செந்தூரில் ஒரு கல்யாண மண்டபத்தை தனியார் முயற்சியில் அமைக்க முன்வருகிறார்கள். அப்படி யாராவது அமைக்க முன் வந்தால் கோவிலை ஒட்டிக் கட்ட உத்தரவு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அப்படித் தனிபட்டவர்கள் கோவில் சார்பில் கட்ட முன்வந்தால் அதை வரவேற்கிறோம்.

Bifurcation of Devasthanams.

* 493 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there are proposals to bifurcate Devasthanams involving administration of more than one temple;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether it is a fact that Tirupparankundram temple will come under separate administration?